**கேகாலை பிரதேச சபை - 2022**

-------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

கேகாலை பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான செலவுக் கணக்கு, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரசச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் கேகாலை பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையான நியாயமான நிலைமையை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கைகணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின. கீழான எனது பொறுப்பு,இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில்மேலும்விபரிக்கப்பட்டுள்ளது.எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில்என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் ததுவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூய பொருண்மையான பிறழ்கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.
- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.
- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,
- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்,
- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகளிற்காக குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரசட்டத்தின் 6(1)(ஈ) (iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரசட்டத்தின் 6(i)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் சமர்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களினுள் உள்ளடக்குகின்றன.

### 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 ஆண்டிற்காக நிலுவை முத்திரைக் கட்டணம் ரூபா 297,000 தொகை இரண்டு முறை கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரிசெய்வதாக. | கணக்கை சரி செய்ய வேண்டும். |
| (ஆ) | ரூபா 1,214,289 ஆன தளர்த்தும் உருளை, பிளேட் கெம்பெக்டர, தார் உருக்கி மற்றும் மின் பிறப்பாக்கி, இயந்தி உபகரணங்களின் கீழ் கணக்கீடு செய்யாது மோடார் வண்டி மற்றும் கருத்தை வண்டியின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரிசெய்வதாக. | - மேற்படி - |
| (இ) | பௌதீக ரீதியாக காணப்படாத, ரூபா 79,900 ஆன புல் வெட்டும் இயந்திரமொன்றை நிலையான சொத்தாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | மேற்கொள்ளப்படும் ஆரம்ப புலனாய்வு விசாரணையின் பின் முன் நடவடிக்கை எடுப்பதாக. | - மேற்படி - |

#### 1.6.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் 19 நானாவித சொத்துக்கள் மற்றும் வருமானக் கணக்கு மீதிகள், அந்த அந்த கணக்கு விடயங்களின் துணை பதிவேடுகளுடன் இணக்கஞ் செய்கையில் ரூபா 19,101,869 வித்தியாசம் காணப்பட்டது. | அவ் வித்தியாசத்தை இணக்கஞ் செய்ய நடவடிக்கை எடுப்பதாக. | நிதிக்கூற்றுக்களில் எண்ணிக்கை, துணை பதிவேடுகளுடன் இணக்கஞ் செய்ய முடியுமாக இருக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 42,347,642 தொகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்ததாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை மிகைத்த வருமானம் ரூபா 36,210,272 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

சுமர்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 3,237,700 | 3,368,627 | 2,148,977 | 2,345,531 | 3,200,200 | 3,262,965 | 1,858,921 | 2,443,431 |
| வாடகை | 4,134,400 | 3,904,325 | 3,721,175 | 280,745 | 3,767,000 | 5,285,700 | 3,397,100 | 547,041 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 980,100 | 882,246 | 882,246 | - | 600,000 | 826,955 | 649,500 | - |
| ஏனைய வருமானம் | 3,996,500 | 6,160,291 | 4,256,085 | 1,904,205 | 3,144,100 | 4,025,393 | 2,264,920 | 190,110 |
| | 12,348,700 | 14,315,489 | 11,008,483 | 4,530,481 | 10,711,300 | 13,401,013 | 8,170,441 | 3,180,582 |

#### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரைகள | பரிந்துரை |
|---|---|---|
| வீதவரி, ஏக்கர் வரி மற்றும் கடை வாடகை போன்ற வருமான விடயங்களிலிருந்து 2022 திசெம்பர் 31 திகதிக்கு ரூபா 2,430,216 அறவிட வேண்டியதாக காணப்பட்டது. அப் பெறுமதியினுள் 01 ஆண்டிற்கும் 05 ஆண்டிற்கு இடையிலான ரூபா 1,427,398 ஆன மீதியும், 05 ஆண்டுகளை விட பழைய ரூபா 706,522 ஆன மீதியும் காணப்பட்டது. | நிலுவை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக மற்றும் அறவிட முடியாத மீதியை பதிவழிப்பதாக. | நிலுவை வருமானத்தை தாமதமின்றி அறவிடப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரைகள | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 06 காணி கட்டிடங்கள், 1½ ஏக்கரான காணியொன்று, 1246 அலுவலக களஞ்சிய பொருட்கள் மற்றும் பொருட் பதிவேட்டு பண்டங்களை மதிப்பிட்டு விலையை இனங்கண்டு கணக்கீடு செய்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் கணக்கீடு யெ்வதாக. | சொத்துக்களை உரிய பெறுமதியில் கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஆ) | 2015 ஆண்டில் கிடைத்த பெக்கோ இயந்திரத்திற்கு 2016 ஆண்டு முதல் இதுவரை வருமான அனுமதிப்பத்திரம் எடுத்திருக்கவில்லை. | பதிவு சான்றிதழை சரிசெய்து தருமாறு மோடார் போக்குவரத்து திணைக்களத்திற்கு அறிவித்துள்ளதாக. | சொத்துக்களின் உரிமை சரியானதாக இருக்க வேண்டும் |
| (இ) | வேலை கடன்படுனர்களிடமிருந்து ரூபா 33,791,348 அறவிட வேண்டியதாக காணப்பட்டதுடன் கடன்கொடுனரிற்காக ரூபா 26,543,620 செலுத்த வேண்டியதாக இருந்தது. | ஏற்றுக் கொள்கிறேன். | மீதிகளை தீர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அதிகார எல்லையில் முச்சக்கர வண்டி நிறுத்துவதற்கு 55 தளங்களை இனங்கண்டிருந்த போதும், அத் தளங்களை கட்டணம் அறவிட முடியுமானவாறு அமைத்திருக்கவில்லை. இதன் காரணமாக, வாகனங்களிலிருந்து கட்டணம் அறவிடுவதற்கு பதிலாக நிறுத்தற் கட்டணமாக சபைக்கு கிடைக்கும் தொகையை ஆண்டின் வருமானமாகக் கருதி கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | முச்சக்கர வண்டி நிறுத்தும் தளங்களின் உரிமை வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமாகும். அந்த அதிகார சபையுடன் ஒருமைப்பாட்டிற்கு வந்து தளங்களை அமைத்துக் கொடுத்து பணம் அறவிடுவதாக. | பெறவேண்டிய அனைத்து வருமானங்களையும் அறவிட வேண்டும். |
| (ஆ) | 1975 இன் 01 இலக்க சொத்துக்கள் பொறுப்புக்களை வெளிப்படுத்தும் சட்டம் பிரகாரம் 22 உறுப்பினர்களினால் முதலாவதாக வழங்க வேண்டிய அவ் வெளிப்படுத்தளை வழங்கியிருக்காததுடன் 27 உறுப்பினர்களால் 2019 ஆண்டு முதல் 2022 வரை இவ்வருடாந்த வெளிப்படுத்தளை சமர்பித்திருக்கவில்லை. | வழங்கிய சொத்துக்கள் பொறுப்புக்களை வெளிப்படுத்தலை உள்ளூராட்சி ஆணையாளரிற்கு அனுப்பியுள்ளதாக. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரைகள | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2014 ஆண்டில் கிடைத்த ரூபா 21,095,000 பெறுமதியான 03 வாகனங்களை சபைக்கு சுவீகரித்திருக்கவில்லை. | 02 வாகனங்களை சுவீகரிக்க நடவடிக்கை எடுத்த போதும், பெக்கோ இயந்திரத்தின் செஸ்சி இலக்கத்திலான விததியாசம் காரணமாக சுவீகரித்தல் தாமதமாகியுள்ளதாத. | சபைக்கு சொந்தமான உரிமைகள் சரியானதாக வேண்டும். |
| (ஆ) | சபைக்கு சொந்தமான ரூபா 971,877 ஆன 02 வாகனங்கள் 10 ஆண்டிற்கும் 12 ஆண்டுகளிற்கும் இடையிலான காலமாக செயலற்று காணப்பட்டன. | அங்கீகாரம் கிடைத்த பின்னர் அவற்றில் ஒரு வாகனத்தை பராதீனம் செய்வதாக. | சொத்துக்களை பயன்படுத்தாது வைக்கக் கூடாது. |
| (இ) | பகல்நேர குழந்தை பராமரிப்பு மத்திய நிலையமொன்றை நிர்மாணிக்க ரூபா 1,694,935 செலவிட்ட போதும், அதற்கு பெண் கட்டுப்பாட்டாளர் ஒருவரை ஆட்சேர்க்க இயலாதிருந்ததால் 2019 ஒப்டோ்பர் முதல் மூடப்பட்டிருந்தது. அவ்வாறே, அம் மத்திய நிலையத்தற்கு விநியோகித்த ரூபா 140,650 ஆன 19 அலகு பண்டங்களை பொருட் பதிவேட்டிற்கு உட்படுத்தி, அலுவலர் ஒருவருக்கு கையளித்திருக்கவில்லை. | தேவையான நடவடிக்கை எடுக்கும் வரை அக் கட்டிடம் போதைப் பொருள் நிவாரண உளவளத்துறை மத்திய நிலைமொன்று மற்றும் சுயதொழில் பயிற்சி மததிய நிலையமொன்றாக பயன்படுத்தப்படும். குறித்த பண்டங்களை பொது களஞ்சியத்தில் பாதுகாப்பாக வைத்துள்ளதாக. | எதிர்பார்த்த நோக்கங்கள் நிறைவேறு வேண்டும். |

## 3.4 ஒப்பந்த நிருவாகத்தின் குறைபாடகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரைகள | பரிந்துரை |
|---|---|---|
| இலக்கம் 01/2021 கொண்ட பொது நிதிச் சுற்றறிக்கைக்கு முரணாக, 2021 மற்றும் 2022 ஆண்டுகளினுள் மேற்கொண்ட மொத்த ஒப்பந்த எண்ணிக்கையில் முறையே 78 சதவீதம் மற்றும் 68 சதவீதம் ஒரே ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டிருந்தது. | ஒப்பந்த சங்கங்கள் முன்வராததால் மகா சபையின் இணக்கத்துடன் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | குறித்த சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.5 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரைகள | பரிந்துரை |
|---|---|---|
| இடம் மாறிச்சென்ற, ஓய்வு பெற்ற, சேவையை விட்டுச் சென்ற 4 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 276,984 ஆன கடன் மீதி, 4 ஆண்டுகள் முதல் 6 ஆண்டுகள் வரை காலம் பழமையானது. | நிலுவை கடன் அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படுவதாக. | நிலுவை மீதியை அறவிட வெண்டும். |